# 22. பயணம் செய்வதற்கு உதவுவோர்

காலை வேளை சிறியோர் எம்மை
பாடசாலை கூட்டிச் செல்ல
வாகனத்தை ஓட்டிக்கொண்டு
சாரதி மாமா வருவார்

வேளைக்கு வேலைக்குச் செல்ல
நாங்கள் விரும்பிய பயணம் செய்ய
எங்களுக்கு உதவி செய்வார்
எங்கள் சாரதி மாமா



இறங்க முடியாத சின்னத் தங்கைக்கு
ஏறமுடியாத சின்னத்தம்பிக்கு
ஒவ்வொரு நாளும் உதவி செய்வார்
எங்கள் காண்டக்டர் மாமா

கவனமாக பாதை கடக்க
சகலருக்கும் போக்குவரத்துச் செய்ய
வாகனங்களை நிறுத்துபவர்
எங்கள் காவல்துறை மாமா



பாடசாலைக்குப் பக்கத்தில் பாதையைக் கடக்க
தங்கை தம்பியர் அனைவரையும்
அந்தப்பக்கம் இந்தப்பக்கம் கூட்டிச் செல்ல
உதவி செய்வாள் காவல்துறை மாமி

இவர்களின் உதவியின் மூலம்
அன்பினையே நான் கண்டேன்
அந்த அன்பை எங்களுக்கு
இறை தந்தையே தருகிறார்

இவர்கள் அனைவரின் மூலம்
நான் பெற்றேன் இறை அன்பைப் பெற்றேன்
ஆகவே நாமனைவரும் ஒன்றுகூடி
இறை தந்தைக்கு நன்றி கூறுவோம்.